


தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், செப்டம்பர் 15, 2026 | இதழ் 155

# தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களை விரிவுபடுத்தவும் நிறுவவும் 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து



சென்னை, 15 செப்டம்பர் 2026: தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களை விரிவுபடுத்தவும் நிறுவவும் 2 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இங்கிலாந்தை சேர்ந்த தகவல் தொடர்பு நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ. 1,000 கோடி முதலீடு செய்ய ஒப்பந்தம். இந்த மையம், சென்னையில் உள்ள மவுண்ட் பூந்தமல்லி சாலையில் புதிதாக அறிவிக்கப்பட்ட 'ஜிசிசி காரிடார்' பகுதியில் அமைக்கப்படவுள்ளது. ரூ.1,000 கோடி முதலீட்டின் மூலம் 2,000க்கும் மேற்பட்ட உயர் மதிப்புடைய புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்

இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட முன்னணி உலகளாவிய தகவல் தொடர்பு நிறுவனம் ஒன்று, தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையத்தை (ஜிசிசி) அமைப்பதற்கு ஏதுவாக, தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனம், ஏர்ன்ஸ்ட் & யங் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. சுமார் 1,000 கோடி ரூபாய் முதலீட்டையும், 2,000-க்கும் மேற்பட்ட உயர் மதிப்புடைய புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் வகையில் அமையவுள்ள இந்த மையம், சென்னையில் உள்ள மவுண்ட் பூந்தமல்லி சாலையில் புதிதாக அறிவிக்கப்பட்ட 'ஜிசிசி காரிடார்' பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

ஸ்வீடனைச் சேர்ந்த சிக்மா டெக்னாலஜி குரூப், தமிழ்நாட்டில் எம்பெடட் சிஸ்டம்ஸ், மின்மயமாக்கல் மற்றும் தொழில்துறை டிஜிட்டல்மயமாக்கல் ஆகிய துறைகளில் 600 உயர் மதிப்பு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னையில் உள்ள தனது உலகளாவிய திறன் மையங்களை, தனது இந்திய நிறுவனமான ஸ்ரியா சொல்யூஷன்ஸ் மூலம் விரிவாக்குவதற்கு உறுதியளித்து, தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள் முன்னிலையில், சிக்மா டெக்னாலஜி குரூப் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. மைக்கேல் கார்ல்சன் மற்றும் திரு.கிருஷ்ணா ராதாகிருஷ்ணன், தலைமை நிர்வாக அதிகாரி, ஸ்ரியா (சிக்மா ஏபி பிரைவேட் லிமிடெட்-இன் ஒரு பகுதி) மற்றும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டி (Guidance) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. தீபக் ஜேக்கப், மிகிஷி ஆகியோருக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இங்கிலாந்து நாட்டிற்கான இந்திய தூதர் திரு. குமரன் பெரியசாமி, மிகிஷி, நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 2028ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தல்: ஜே.டி.வான்சுக்கு ஆதரவு அளிக்க டிரம்ப் தயக்கம்: மார்கோ ரூபியோ பேச்சும் அடிபடுவதால் பரபரப்பு



சென்னை 15, செப்டம்பர் 2026: அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்சை அடுத்த அதிபர் வேட்பாளராக இப்போதே அறிவிக்க முடியாது என டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் கடைசியாக நடந்த அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த அரசில் துணை அதிபராக ஜே.டி. வான்ஸ் செயல்பட்டு வருகிறார். வரும் 2028ம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் ஜே.டி.வான்ஸ் அதிபர் பதவிக்கான வேட்பாளராக களமிறக்கப்படுவார் என கட்சியின் மூத்த நிர்வாகிகள் தரப்பில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

ஆனால் அவருக்கு போட்டியாக தற்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோவும் முன்னிலைப்படுத்தப்படுகிறார். இருவரில் யாரை அடுத்த தலைவராக உருவாக்குவது என்பது குறித்து டிரம்ப் தொடர்ந்து தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார். இதற்கிடையே அயர்லாந்து நாட்டின் சானன் நகருக்கு சென்ற அமெரிக்க அதிபர் டிரம்பிடம், 'அடுத்த அதிபர் தேர்தலில் வான்சை ஆதரிப்பீர்களா?' என நிருபர்கள் சரமாரியாக கேள்விகளை எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த டிரம்ப், 'வான்சுக்கு இப்போது ஆதரவு அளிப்பது மிகவும் முன்கூட்டிய முடிவாகிவிடும். அவர் ஒரு அற்புதமான மனிதர். தனது பணிகளை மிகச் சிறப்பாக செய்து முடித்துள்ளார். ஆனாலும் எங்கள் கட்சியில் திறமையான தலைவர்கள் இன்னும் பலர் உள்ளனர்' என்று தெரிவித்தார். கடந்த ஆகஸ்ட் மாதம் வெள்ளை மாளிகையில் நடந்த ரகசிய கூட்டத்தில், அடுத்ததாக வான்சைத் தான் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என டிரம்ப் கூறியதாக வாஷிங்டன் போஸ்ட் நாளிதழில் செய்திகள் வெளியாகின.

'ான்ஸ் தரப்பிலும் வரும் நவம்பர் மாதம் நடக்கும் நாடாளுமன்ற இடைத்தேர்தலுக்கு பிறகே இதுகுறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் மார்கோ ரூபியோ 2028ம் ஆண்டு தேர்தல் குறித்து எவ்வித நேரடி கருத்துகளையும் தெரிவிக்காமல் மவுனம் காத்து வருவது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆசிய கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து




சென்னை, 15 செப்டம்பர் 2026: ஆசிய கோப்பை தொடர் முழுவதும் சீரான ஆட்டத்தினை வெளிப்படுத்தி கோப்பையை வெற்றி பெற்றீர்கள். இந்திய கிரிக்கெட்டுக்கு பெருமைக்குரிய தருணம் இது என இந்திய மகளிர் அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். உங்களது இந்த வெற்றி நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கட்டும் என அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மகளிர் ஆசிய கோப்பை டி20 பைனலில், நடப்பு சாம்பியன் இலங்கை அணியை 72 ரன் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்தியா 8வது முறையாக கோப்பையை கைப்பற்றி சாதனை படைத்தது. துபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்தது. மந்தனா, ஷபாலி இணைந்து இந்திய இன்னிங்ஸை தொடங்கினர். அதிரடியாக விளையாடிய இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 12.5 ஓவரில் 129 ரன் சேர்த்து அசத்தியது. ஷபாலி 68 ரன் (39 பந்து, 9 பவுண்டரி, 2 சிக்சர்), மந்தனா 59 ரன் (39 பந்து, 5 பவுண்டரி, 3 சிக்சர்) விளாசினர். கேப்டன் ஹர்மான்பிரீத் 14, ரிச்சா கோஷ் 17, தீப்தி 5 ரன் எடுக்க, இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 183 ரன் குவித்தது.

அடுத்து களமிறங்கிய இலங்கை 20 ஓவரில் 111 ரன் எடுத்து ஆல் அவுட்டானது. கேப்டன் சமாரி 36 ரன், விஷ்மி 20 ரன், நிலாக்ஷிகா 22 ரன் எடுத்தனர். இந்திய பந்துவீச்சில் ஸ்ரீசரணி 4, தீப்தி 3 விக்கெட், கிராந்தி, ஷபாலி, பிரேமா தலா 1 விக்கெட் கைப்பற்றினர். 72 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்ற இந்தியா 8வது முறையாக மகளிர் ஆசிய கோப்பையை கைப்பற்றி சாதனை படைத்தது.

பிரதமரின் சமூக வலைதள பதிவில்;

இந்திய கிரிக்கெட்டுக்கு ஒரு பெருமைக்குரிய தருணம்!

ஆசியக் கோப்பையை வென்ற மகளிர் அணிக்கு வாழ்த்துகள். இத்தொடர் முழுவதும் அவர்களின் தன்னம்பிக்கை, சீரான ஆட்டத்திறன் மற்றும் சிறப்பான மன உறுதி ஆகியவை வெளிப்பட்டன.

இந்த வெற்றி, நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுச் சிறந்து விளங்க ஊக்கமளிக்கட்டும்.

# செமிகான் இந்தியா மாநாட்டை செப்டம்பர் 17-ல் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்

சென்னை 15, செப்டம்பர் 2026: இந்தியாவின் முதன்மையான செமிகண்டக்டர் மின்னணுவியல் மாநாடான செமிகான் இந்தியா மாநாட்டின் ஐந்தாவது பதிப்பு, 2026 செப்டம்பர் 17 முதல் 19 வரை புது தில்லியில் உள்ள யஷோபூமியில் நடைபெறுகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடி 2026 செப்டம்பர் 17 அன்று இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்கிறார். இதில் மூன்று நாட்கள் உயர்மட்டக் கலந்துரையாடல்கள், தொழில்துறை பங்கேற்பு ஆகியவை இதில் இடம் பெறும்.

இந்திய செமிகண்டக்டர் இயக்கம், மத்திய மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், செமிகண்டக்டர் வடிவமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் உலகளாவிய தொழில் சங்கமான எஸ்இஎம்ஐ ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செமிகான் இந்தியா 2026 மாநாடு, உலகளாவிய செமிகண்டக்டர் நிறுவனங்கள், மின்னணுவியல் நிறுவனங்கள், தொழில் துறைத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள், மாணவர்கள் ஆகியோரை பொதுவான தளத்தில் ஒன்றிணைத்து, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், ஒத்துழைப்பை உருவாக்கவும் வழிவகுக்கும்.

யஷோபூமியில் மூன்று நாட்களுக்கு, 15,000 சதுர மீட்டர் பரப்பளவில், 300 சர்வதேச நிறுவனங்கள் உட்பட 600-க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் ஒன்றிணைவார்கள். இவர்களுடன், 150-க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற பேச்சாளர்கள் தங்களின் அறிவு, அனுபவம், நுண்ணறிவுகளைப் பகிர்ந்துகொள்வார்கள். ஆறு நாட்டு அரங்குகள், 12 மாநில அரங்குகள், ஒரு புத்தொழில் கண்காட்சி, ஒரு மாணவர் ஹேக்கத்தான் ஆகியவையும் இதில் இடம்பெறும். இவை ஒவ்வொன்றும், கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தியா சீராகக் கட்டமைத்து வரும் குறைக்கடத்திச் சூழலமைப்பின் வெவ்வேறு பகுதிகளைப் பற்றிய ஒரு பார்வையை வழங்கும்.



## ‘ஆஸ்டர் கார்டியன்ஸ் குளோபல் நர்சிங் அவார்ட் 2026’ : இங்கிலாந்தைச் சேர்ந்த அஜிமோல் பிரதீப் 2,50,000 அமெரிக்க டாலர் பரிசுத் தொகையை வென்றார்.

சென்னை 15, செப்டம்பர் 2026: 214 நாடுகள் மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த 1,34,000-க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களிலிருந்து, இங்கிலாந்தைச் சேர்ந்த செவிலியர் அஜிமோல் பிரதீப் ‘ஆஸ்டர் கார்டியன்ஸ் குளோபல் நர்சிங் அவார்ட் 2026’ விருதின் வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இங்கிலாந்தின் கிங்ஸ் காலேஜ் மருத்துவமனையில் மூத்த உறுப்பு மாற்று ஒருங்கிணைப்பாளராகவும் (சீனியர் ட்ரான்ஸ்ப்ளான்ட் கோஆர்டினேட்டர்), சால்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் கௌரவ மூத்த விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார். இந்தியாவின் கொச்சியில் நடைபெற்ற விழாவில், 2,50,000 அமெரிக்க டாலர் மதிப்புள்ள இந்தப் புகழ்பெற்ற விருதை அவர் பெற்றுக் கொண்டார்.

கேரள மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. வி. டி. சதீசன் இந்த விருதை செவிலியர் அஜிமோல் பிரதீப்பிற்கு வழங்கினார். இந்நிகழ்வில் ஆஸ்டர் டிஎம் குவாலிட்டி கேர் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாகத் தலைவர் டாக்டர் ஆசாத் மூப்பன், நிர்வாக இயக்குனர் அலிஷா மூப்பன், இயக்குனர் டி. ஜே. வில்சன் மற்றும் நிர்வாக இயக்குனர் மற்றும் குழும தலைமை நிர்வாக அதிகாரி (குரூப் சிஇஓ) வருண் கண்ணா ஆகியோர் உடனிருந்தனர்.

2021-ல் தொடங்கப்பட்டதிலிருந்து, ‘ஆஸ்டர் கார்டியன்ஸ் குளோபல் நர்சிங் அவார்ட்’ ஆனது, செவிலியர் பணியை மேம்படுத்தி அர்த்தமுள்ள மாற்றங்களை




உருவாக்கும் செவிலியர்களைக் கொண்டாடும் ஒரு உலகளாவிய தளமாக வளர்ந்துள்ளது. இந்த ஆண்டு 214 நாடுகள் மற்றும் பிராந்தியங்களிலிருந்து பெறப்பட்ட 1,34,000 விண்ணப்பங்கள், பல்வேறு சுகாதாரச் சூழல்கள், சமூகங்கள் மற்றும் துறைகளில் பணியாற்றும் செவிலியர்களின் கதைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. இது செவிலியர் பணியின் உலகளாவிய முக்கியத்துவத்தையும், உலகெங்கிலும் உள்ள சுகாதார அமைப்புகள் மற்றும் சமூகங்களில் செவிலியர்கள் ஏற்படுத்தும் தாக்கத்தின் பரந்த தன்மையையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இவ்விழாவில் உலக சுகாதார அமைப்பின் (டபிள்யுஹெச்ஓ) தலைமை இயக்குனர் டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் அவர்களின் சிறப்புச் செய்தியும் இடம்பெற்றது. அவர் இறுதிப் போட்டியாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், செவிலியர்களையும் உலகளாவிய சுகாதாரத் துறையில் அவர்களின் பங்களிப்பையும் கொண்டாடுவதில் ‘ஆஸ்டர் கார்டியன்ஸ் குளோபல் நர்சிங் அவார்ட்’ வகிக்கும் முக்கிய பங்கை அங்கீகரித்துப் பாராட்டினார்.

## இந்தி தினத்தையொட்டி உள்துறை அமைச்சர் அமித் ஷா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி

சென்னை 15, செப்டம்பர் 2026: அன்பான நாட்டு மக்களே,

இந்தி தின நன்னாளில் உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்!

நமது நாடு, மொழிப் பன்மையும் வளமான பண்பாட்டு மரபும் கொண்ட ஒரு தனித்துவமான பூமி. நம்மிடம் வெவ்வேறு மொழிகள் இருப்பது ஒரு பலவீனம் என்று பலர் கூறுகிறார்கள். ஆனால் இத்தனை மொழிகள் இருப்பதே நமது மிகப்பெரிய பலம் என்று நான் நம்புகிறேன். ஒவ்வொரு மொழியும் தனக்கென ஒரு வரலாற்றையும், நாட்டுப்புற மரபுகளையும், ஒரு தனித்துவமான உலகப் பார்வையையும் கொண்டுள்ளது. இவை நமது இளைய தலைமுறையினரின் விழுமியங்களையும் பண்பாட்டு நெறிமுறைகளையும் முன்னோக்கி எடுத்துச் செல்லவும் உதவுகின்றன. இந்த மொழிப் பன்மைத் தன்மை, இந்தியாவை வரையறுக்கும் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற உணர்வை வலுப்படுத்துகிறது. மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு சாதனம் மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் சுய உணர்வாகும்.

இந்தப் பன்முகத் தன்மைக்கு மத்தியில், இந்தி ஒரு உரையாடல், தகவல் தொடர்பு, ஒருங்கிணைப்பு மொழியாக முக்கியப் பங்காற்றியுள்ளது. இது நாடு முழுவதும் உள்ள பல்வேறு பிரிவுகள், சமூகங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்துள்ளது. அனைத்து இந்திய மொழிகளுக்கும் மரியாதை அளித்து, அவற்றைப் பாதுகாத்து, மேம்படுத்தும் அதே வேளையில் இந்தியின் வளர்ச்சி முன்னேறும் போதுதான், அது உண்மையாகவே அர்த்தமுள்ளதாக அமையும். இந்தி எந்த மொழிக்கும் போட்டியாளர் அல்ல. மாறாக, அது இந்திய மொழிகளிடையே ஒரு நெருக்கத்தையும் உரையாடல் உணர்வையும் வளர்ப்பதற்கும், தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் ஒரு முக்கிய இணைப்பாகும். இந்த உண்மைக்கான மிக அழகான சான்று நமது சொந்த வரலாற்றிலேயே உள்ளது. சுவாமி தயானந்த சரஸ்வதி குஜராத்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும், அவர் 'சத்யார்த்த பிரகாஷ்' நூலை இந்தியில் எழுதினார். மகாத்மா காந்தி 1918-ல் சென்னையில் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபையை நிறுவினார். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வங்காளம் பேசுபவராக இருந்த போதிலும், அவர் இந்தியை ஆசாத் ஹிந்த் ஃபௌஜின் தகவல் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொண்டு, தேசத்திற்கு 'ஜெய் ஹிந்த்' என்ற எழுச்சியூட்டும் முழக்கத்தை வழங்கினார். இவ்வாறு, பல்வேறு மொழிப் பின்னணியைச் சேர்ந்த மக்கள், இந்தியை மக்களிடையே ஒரு தகவல் தொடர்பு மொழியாக மாற்றுவதில் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளனர். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத இந்த மாபெரும் ஆளுமைகளின் அளப்பரிய பங்களிப்பு, நம் அனைவருக்கும் உத்வேகத்தின் ஊற்றாகத் திகழ்கிறது.

அலுவல் மொழி தினமான இன்று, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என் மனமார்ந்த வாழ்த்துகள். வந்தே மாதரம்!

## “நான் ஏற்று நடித்த கதாபாத்திரங்களிலேயே தவசிமுத்து மிகவும் சவாலானது”...‘என்ன விலை’ படம் குறித்து நடிகர் கருணாஸ்!

சென்னை 15, செப்டம்பர் 2026: தமிழ் திரையுலகில் 25 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள நடிகர் கருணாஸ், தொடர்ந்து பல்வேறு கதைக்களங்களிலும், வித்தியாசமான கதாபாத்திரங்களிலும் நடித்து வருகிறார். பல்வேறு மறக்க முடியாத கதாபாத்திரங்கள் மூலம் தனக்கென தனியிடத்தைப் பிடித்துள்ள அவர், தற்போது தேசிய விருது பெற்ற திரைப்பட இயக்குநர் சஜீவ் பழூரின் எழுத்து மற்றும் இயக்கத்தில் உருவாகியுள்ள ‘என்ன விலை’ திரைப்படத்தில் சவால் நிறைந்த, உணர்வுப்பூர்வமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

ராமேஸ்வரம் அருகே கடலில் பக்தர்கள் காணிக்கையாக வீசும் நாணயங்களை மீட்டெடுக்கும் நாணய மீட்பாளரான தவசிமுத்து கதாபாத்திரத்தில் இந்த படத்தில் கருணாஸ் நடித்துள்ளார். செப்டம்பர் 17ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள இப்படம், வித்தியாசமான வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்ட கதையையும், கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கான போராட்டத்தையும் பற்றி பேசுகிறது.

இப்படத்தில் நடித்த அனுபவம் குறித்து நடிகர் கருணாஸ் பகிர்ந்து கொண்டுள்ளார், “தவசிமுத்து கதாபாத்திரம் என்னிடம் முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறையை எதிர்பார்த்தது. அவரது வாழ்க்கையும் வாழ்வாதாரமும் கடலுடன் மிகவும் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்திருக்கின்றன. அவர் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் படிப்படியாக அவரை மிகப் பெரிய போராட்டத்திற்குள் அழைத்துச் செல்கின்றன. இந்தக் கதாபாத்திரத்தை எனக்குச் சிறப்பானதாக மாற்றியது, அவர் கடந்து செல்லும் உணர்வுப்பூர்வமான பயணம்தான். ‘என்ன விலை’ திரைப்படத்தின் கருவாக வாழ்வாதாரம், கண்ணியம், சுயமரியாதையுடன் வாழ்வதற்கான உரிமை ஆகியவற்றை பேசுகிறது. ஒரு நடிகராக இந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் கதாபாத்திரத்தை ஏற்று நடித்ததில் மிகவும் மகிழ்ச்சி”

மேலும் அவர் பகிர்ந்து கொண்டதாவது, “சஜீவ் பழூர் மிகவும் தெளிவான பார்வையுடன் இந்தக் கதையை எழுதியுள்ளார். உணர்வுப்பூர்வமான மைய கதையை சமரசம் செய்யாமல், வலுவான சமூக கருத்தையும் இதில் பேசியுள்ளார். கதாபாத்திரங்கள் மற்றும் அவை சார்ந்த



உலகத்தைப் பற்றிய அவரது புரிதல், இந்தப் படப்பிடிப்பு அனுபவத்தை எனக்கு மிகவும் சுவாரஸ்யமானதாக மாற்றியது. நிமிஷா சஜயன் மற்றும் படத்தின் மற்ற நடிகர்களுடன் இணைந்து பணியாற்றியதும் சிறப்பான அனுபவமாக இருந்தது. ஒரு சாதாரண மனிதன் எதிர்கொள்ளும் அசாதாரணமான சூழ்நிலையை மிகவும் அழுத்தமாகப் பேசுவதால், ‘என்ன விலை’ திரைப்படத்தை நிச்சயம் ரசிகர்கள் தங்களுடன் பொருத்தி பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்” என்றார்.

சமூக முக்கியத்துவம் வாய்ந்த பின்னணியில் உருவாகியுள்ள ‘என்ன விலை’, ராமேஸ்வரம் அருகே கடலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் நாணயங்களை மீட்டெடுத்து வாழும் ஒருவரின் கதையை மையமாகக் கொண்டது. கண்ணியத்துடனும் வாழ்வாதாரத்துக்காகவும் அவர் நடத்தும் போராட்டம், இறுதியில் ஒரு முக்கியமான சட்டப் போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.

இந்தப் படத்தில் கருணாஸ், நிமிஷா சஜயன், ஷாஷா சிவகுமார், விஜயலட்சுமி வீரமணி, சித்தா தர்ஷன், பூர்ணிமா பாக்யராஜ், ஒய்.ஜி. மகேந்திரன், மொட்ட ராஜேந்திரன், நிழல்கள் ரவி, பிரவீணா, மோகன் ராம், சேத்தன் குமார், கவிதாலயா கிருஷ்ணன், கமலேஷ், கோலி சோடா பாண்டி, ஜே.எஸ். கவி, சுவாமிநாதன், தீபா சங்கர், கவி நக்கலைட்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள இந்தப் படத்தை கலாமயா ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஜிதேஷ் வி தயாரித்துள்ளார். படத்தின் இசையை சாம் சி.எஸ். அமைத்துள்ளார். ஒளிப்பதிவை ஆல்பி ஆண்டனி மேற்கொண்டுள்ளார். படத்தொகுப்பை ஸ்ரீ ஜித் சாரங் கவனித்துள்ளார்.

சமூக முக்கியத்துவம் வாய்ந்த கதைக்களம் மற்றும் திறமையான நடிகர்களுடன் உருவாகியுள்ள ‘என்ன விலை’ திரைப்படம் உலகம் முழுவதும் செப்டம்பர் 17 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

## மலேசியாவில் கடற்படைப் பயிற்சி – ஐஎன்எஸ் மைசூர் கப்பல் பங்கேற்றது

சென்னை 15, செப்டம்பர் 2026: இந்தியக் கடற்படையின் செயல்பாட்டுப் பணியின் ஒரு பகுதியாக, இந்தியக் கடற்படைக் கப்பலான ஐஎன்எஸ் மைசூர், 2026 செப்டம்பர் 09 முதல் 12 வரை மலேசியாவின் லுமுத் நகரில், மலேசிய கடற்படையுடன் இணைந்து சமுத்ர லட்சமணா என்ற பயிற்சியின் 4-வது பதிப்பில் பங்கேற்றது.

இந்தப் பயிற்சியானது, இந்தியக் கடற்படைக்கும் மலேசிய கடற்படைக்கும் பல்வேறு வகையான தொழில்முறை, செயல்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கியது. துறைமுகக் கட்டத்தின்போது, இரு கடற்படைகளின் பணியாளர்களுக்கிடையே தொழில்முறைப் பரிமாற்றங்களும் கலந்துரையாடல்களும்



இடம்பெற்றன. இது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும், பரஸ்பரப் புரிதலை மேம்படுத்துவதற்கும் வழிவகுத்தது.

இந்தப் பயிற்சியின், இந்தியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையிலான கடற்படை ஒத்துழைப்பின் வளர்ந்து வரும் ஆழத்தையும் முதிர்ச்சியையும் பிரதிபலிக்கிறது. மேலும், இரு கடற்படைகளுக்கும் இடையே மேம்பட்ட செயல் பாட்டுப் புரிதலைக் கட்டியெழுப்புவதில், வலுவான ஒத்துழைப்பையும் இது எடுத்துக்காட்டுகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# ‘டாய்ரா’ படத்தில் எதிரெதிர் பக்கங்களில் நீதியைத் தேடும் கரீனா கபூர் கான் மற்றும் பிருத்விராஜ் சுகுமாரன்!

சென்னை 15, செப்டம்பர் 2026: தேசிய விருது பெற்ற இயக்குநர் மேக்னா குல்சார் இயக்கத்தில் உருவாகியிருக்கும் ‘டாய்ரா’ திரைப்படத்தில் கரீனா கபூர் கான் மற்றும் பிருத்விராஜ் சுகுமாரன் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜங்லீ பிக்சர்ஸ் மற்றும் டாக்டர் ஜெயந்திலால் கடா (பென் ஸ்டுடியோஸ்) இணைந்து தயாரிக்கும் இப்படம் செப்டம்பர் 18 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

‘டாய்ரா’ திரைப் படத்தின் டிரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது. உண்மை என்பது எப்போதும் முழுமையானதல்ல, நீதியைப் பல்வேறு கோணங்களில் புரிந்து கொள்ள முடியும், ஒவ்வொரு முடிவுக்கும் ஒரு விளைவு உண்டு போன்ற விஷயங்களை முன்னிறுத்தி கதையின் முதல் பார்வையை இந்த டிரெய்லர் வழங்குகிறது. மேக்னா குல்சார் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படம் குற்றம், நீதி மற்றும் தண்டனை ஆகியவற்றை மையமாகக் கொண்டு, பரபரப்பு நிறைந்த உணர்வுப்பூர்வமான கதையைச் சொல்கிறது. யஷ் கேஸ்வானி, சிமா அகர்வால் மற்றும் மேக்னா குல்சார் ஆகியோர் இணைந்து இப்படத்தின் திரைக் கதையை எழுதியுள்ளனர்.

உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள ‘டாய்ரா’, நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும் ஒரு குற்றச் சம்பவத்துக்குப் பிறகு நடைபெறும் நிகழ்வுகளைச் சுற்றி நகர்கிறது. இந்தச் சம்பவம் பொது மக்களின் கோபத்தைத் தூண்டுவதுடன், அடுத்தடுத்த விசாரணைகளையும் தொடங்கி வைக்கிறது. விடைகளுக்கான தேடல் தீவிரமடையும் போது, மூத்த காவல் துறை அதிகாரிகளான கரீனா கபூர் கான் மற்றும் பிருத்விராஜ் சுகுமாரன் இருவரும் கடமை மற்றும் நீதியை அணுகும் வெவ்வேறு பார்வைகளுடன் ஒரே அமைப்புக்குள் பயணிக்கின்றனர். சரி, தவறு என்ற அடிப்படை எண்ணத்தையே கேள்விக்குள்ளாக்கும் ஒரு வழக்கில், இருவரும் எதிரெதிர் பக்கங்களில் நிற்கின்றனர்.

யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்ட இப்படத்தின் டிரெய்லர், புதிய தகவல்கள் வெளியாகும் போது வழக்கைப் பற்றிய நமது பார்வையே மாற்றும் வகையில் பதற்றத்தை படிப்படியாக அதிகரிக்கிறது. சிந்திக்கத் தூண்டும் கூர்மையான வசனங்கள், உண்மை மற்றும் நீதி குறித்த கடினமான கேள்விகளை எழுப்புகின்றன. அதே நேரத்தில், குற்றச் சம்பவத்தைத் தாண்டி, மக்களின் பார்வை மற்றும் அதிலிருந்து உருவாகும்



பல்வேறு கதைகளையும் ‘டாய்ரா’ ஆராய்கிறது. ‘டாய்ரா’ எளிதில் பதில் சொல்ல முடியாத பல கேள்விகளை எழுப்புகிறது. ஒரு கதை எவ்வளவு வேகமாகத் தீர்ப்பாக மாறிவிடுகிறது, ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து இருக்கும்போது, நீதி எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது யார், நாம் வெறும் பார்வையாளர்களாக இருக்கும் போது, எதை நம்புவது என்பதை எவ்வாறு முடிவு செய்கிறோம் என்பதுதான் அவை.

டிரெய்லரில் இப்படத்தின் மற்ற கதாபாத்திரங்களான ஜிதேந்திர ஜோஷி, க்ஷிதி ஜோக், கன்வல்ஜீத் சிங், சந்தீப் குல்கர்னி மற்றும் த்ருப்தி கம்கர் ஆகியோரும் அறிமுகமாகின்றனர். கரீனா கபூர் கான் மற்றும் பிருத்விராஜ் சுகுமாரனுடன் இணைந்து, மாறுபட்ட கண்ணோட்டங்கள், கடினமான முடிவுகள் மற்றும் அவற்றின் விளைவுகளால் உருவாகும் கதைக்கு இவர்களின் நடிப்பு கூடுதல் வலு சேர்க்கிறது.

கரீனா கபூர் கான் மற்றும் பிருத்விராஜ் சுகுமாரன் போன்ற இரு சிறந்த நடிகர்களின் திறமையான நடிப்பு படத்தை மேலும் சிறப்பாக்கியுள்ளது. இருவரும் தங்களது கதாபாத்திரங்களுக்கு உயிர் கொடுத்துள்ளனர். உள்ளடக்கத்தை முதன்மையாகக் கொண்டு செயல்படும் ஜங்லீ பிக்சர்ஸுடன் இணைந்து பணியாற்றியதும் சிறப்பான அனுபவமாக இருந்தது. அர்த்தமுள்ள கதைகளை உருவாக்குவதில் அவர்களின் பார்வையும் அர்ப்பணிப்பும் எங்களுடன் ஒத்துப்போகின்றன. ‘டாய்ரா’ பார்வையாளர்களை இறுதிவரை கட்டிப்போட்டு, அவர்கள் திரையரங்கிலிருந்து வெளியேறிய பிறகும் அவர்களுடன் தொடர்ந்து பயணித்து, பல கேள்விகளையும் விவாதங்களையும் உருவாக்கும் என்று நம்புகிறோம்” என்றார்.

‘டாய்ரா’ மூலம் இயக்குநர் மேக்னா குல்சார், தனிப்பட்ட நம்பிக்கைகள் சட்டத்தின் வரம்புகளை எதிர்கொள்ளும்போது உருவாகும் கடினமான முடிவுகளை ஆராயும் வகையில், பல அடுக்குகளைக் கொண்ட கதையையும் வலுவான நடிகர்கள் குழுவையும் ஒன்றிணைத்துள்ளார். பென் மருதர் நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் ‘டாய்ரா’ திரைப்படம், செப்டம்பர் 18 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

# நேபாளத்திற்கு மின்சாரம் வழங்குகிறது இந்தியா

சென்னை 15, செப்டம்பர் 2026: 13 செப்டம்பர் 2026 முதல் 31 டிசம்பர் 2026 வரை, நேபாள மின்சார ஆணையத்திற்கு ஒரு நாளைக்கு 18 மணி நேரம் அதாவது நள்ளிரவு 12 மணி முதல் மாலை 6 மணி வரை மின்சாரம் வழங்க மத்திய மின்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

முசாஃபர்பூர் - தல்கேபார் 400 கேவி நேர்மின்னோட்ட வழித்தடம் வழியாக 600 மெகாவாட் வரையிலும், தனக்பூர் - மகேந்திரநகர் 132 கேவி குறுக்கு மின்னோட்ட வழித்தடம் வழியாக 54 மெகாவாட் வரையிலும் மின்சாரம் அனுப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி 2027 முதல் வழங்கப்பட வேண்டிய மின்சாரத்தின் அளவு, டிசம்பர் 2026-ல் மறுஆய்வு செய்யப்படும்.

சமீபத்திய வெள்ளப் பெருக்குகள் நேபாளத்தின் நீர்மின் உள்கட்டமைப்பில் பெரிய சேதத்தை ஏற்படுத்தி, அதன் உள்நாட்டு மின் உற்பத்தித் திறனைக் குறைத்து, மின்சாரத்திற்கான கூடுதல் தேவையையும் உருவாக்கியுள்ளன.

இந்த நிலையில் இந்தியாவின் இந்த ஒப்புதல், இக் கடினமான காலகட்டத்தில் நேபாளம் தனது மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவதோடு, இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான நெருக்கமான, நீண்டகால எரிசக்தி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும்.

# எம்எஸ்இயின் மின்னணு பத்திர தளம் செபியின் டிமேட் 2.0 பைலட்டின் கீழ் டோக்கனைஸ் செய்யப்பட்ட கார்ப்பரேட் பத்திர வெளியீட்டை செயல்படுத்துகிறது

சென்னை 15, செப்டம்பர் 2026: செபி ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் கட்டமைப்பின் கீழ் கார்ப்பரேட் பத்திரங்களை அடையாளப் படுத்துவதற்கு ஒரு முன்னோடி முயற்சியான செபியின் "டிமேட் 2.0" பைலட்டின் ஒரு பகுதியாக இருப்பதில் இந்திய பெருநகர பங்குச்சந்தை (எம்எஸ்இ) பெருமிதம் கொள்கிறது.

இது இந்திய மூலதனச் சந்தைகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கிறது, கார்ப்பரேட் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட லெட்ஜரில் சொந்தமாக வழங்கப்படுகின்றன, அதே நேரத்தில் உரிமையாளர் பதிவுகள் சட்ட ரீதியான வைப்புத் தொகைகளுடன் பராமரிக்கப்படுகின்றன மற்றும் தற்போதுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை உள்ள கட்டமைப்பிற்குள் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தில் (சிபிடிசி) தீர்வு மேற்கொள்ளப் படுகிறது.

முன்னோடியின் ஒரு பகுதியாக, எம். எஸ். இ. யின் எலக்ட்ரானிக் பாண்ட் பிளாட்ஃபார்ம் (எம். எஸ். இ. ஈ. பி. பி) ஐ. ஐ. எஃப். எல் ஃபைனான்ஸ் லிமிடெட், டிரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் அட்வைசர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தனது முதல் அடையாளப் படுத்தப்பட்ட பெரு நிறுவன பத்திர வெளியீட்டு எளிதாக்கியது. லிமிடெட் இந்த பிரச்சினைக்கு ஏற்பாட்டாளராக செயல்படுகிறது.

இந்த முன்முயற்சி இந்தியாவின் கடன் சந்தை உள்கட்டமைப்பின் பரிணாம வளர்ச்சியை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது, விரைவான தீர்வு, மேம்பட்ட வெளிப்படைத் தன்மை, பரந்த அணுகல் மற்றும் மூலதன உருவாக்கத்தில் அதிக செயல்திறன் ஆகியவற்றை செயல்படுத்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறது.

செபி தலைவர் திரு துஹின் காந்தா பாண்டே மற்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சீவ் மல்ஹோத்ரா ஆகியோர் உலகளாவிய ஃபின்டெக் ஃபெஸ்ட் 2026 இல் சந்தை உள்கட்டமைப்பு இடைத்தரகர்கள் (எம்ஐஐ) நிதிச் சந்தைகள், ஃபின்டெக் மற்றும் தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பைச் சேர்ந்த முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைத்து டோக்கனை செய்யப்பட்ட கார்ப்பரேட் பத்திரங்களுக்கான முன்னோட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த முன்முயற்சி குறித்து கருத்து தெரிவித்த எம்எஸ்இயின் எம்டி மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி லத்திகா எஸ். குண்டு, "டிமேட் 2.0 பைலட் மூலம் புதுமைகளுக்கான செபியின் முன்னோக்கு அணுகுமுறை இந்தியாவின் கடன் சந்தைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒரு முக்கியமான படியாகும். டோக்கனைசேஷன் தொழில்நுட்பம் மற்றும் நம்பகமான சந்தை உள்கட்டமைப்பை ஒன்றிணைத்து மிகவும் திறமையான, வெளிப்படையான மற்றும் பாதுகாப்பான மூலதன உருவாக்கத்தை செயல்படுத்துகிறது.

இந்த பயணத்திற்கு பங்களிக்கவும், நாளைய சந்தைகளை உருவாக்கவும் உதவுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்".

# “ரசிகர்களின் எதிர்பார்ப்பை எகிறவைக்கும் கிரைம் த்ரில்லர்...” : ‘பீப்’ படம் குறித்து மனம் திறந்த நடிகர் ராகவ்!

சென்னை 15, செப்டம்பர் 2026: 'எந்திரன்', 'நஞ்சுபுரம்', 'வேலாயுதம்', 'கல்யாண சமையல் சாதம்' உள்ளிட்ட படங்களில் மிக முக்கியமான கதாபாத்திரங்களில் நடித்து கவனம் ஈர்த்தவர் நடிகர் ராகவ். இவரது நடிப்பில் அடுத்ததாக 'பீப்' திரைப்படம் வெளியாக இருக்கிறது.

இயக்குநர் இல. சண்முகசுந்தர் இயக்கியுள்ள இப்படம் ஒரு கிரைம் திரில்லர் ஆக உருவாகி இருக்கிறது.

படம் விரைவில் வெளியாக இருக்கும் நிலையில் படம் குறித்தும், படத்தில் நடித்த அனுபவம் குறித்தும் பகிர்ந்து கொண்டார் நடிகர் ராகவ்.

“நாம் ஒரு விஷயம் கேட்க வேண்டாம் அல்லது கேட்கக் கூடாது என அதை கட் பண்ண நினைத்தால் அந்த இடத்தில் ஒரு 'பீப்' போடுகிறோம் அதாவது துண்டிக்கப் பட்ட குரல்கள் என்று சொல்வார்களே அது போல சொல்லப்படாதவை என்று இந்த 'பீப்' டைட்டிலுக்கு அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம்.

அந்த வகையில் வழக்கமாக நிறைய சொல்லப்படாத விஷயங்களை இந்த படத்தில் தொட்டிருக்கிறோம். அதாவது படம் பார்ப்பவர்களின் எதிர்பார்ப்பை குறிவைக்கும் ஒரு க்ரைம் திரில்லர் என்று சொன்னால் சரியாக இருக்கும்.

படத்தின் ஹீரோவுக்கு ஒரு சூப்பர் பவர் இருக்கு என்றாலும் அவர் சூப்பர் மேன் கிடையாது. நான்கு டிஜிட் பெருக்கல் கணக்கைக் கூட சிலர் உடனடியாக விடை சொல்கிறார்களே.. அதுபோல இந்த ஹீரோவுக்கும் ஒருவிதமான சூப்பர் பவர் இருக்கு. அதேசமயம் சூப்பர் பவர் என்பது நார்மலான ரியல் லைஃப்பில் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை தான் இதில்



அழகாக உருவாக்கி இருக்கிறோம்.

இரண்டு பாடல்கள் தான் படத்தில் இருக்கிறது ஆனால் ஒரு க்ரைம் திரில்லர் என்பதால் இசையமைப்பாளர் பிரசாந்த் விஹாரியின் பின்னணி இசை படத்திற்கு ஒரு ஆன்மாவாக அமைந்திருக்கிறது.

ஒரு க்ரைம் த்ரில்லர் என்கிறபோது படம் பார்க்கும் ரசிகர்களும் அவர்களே கதைக்குள் இறங்கி சில விஷயங்களை கணக்கு போட்டு கண்டுபிடிப்பது போன்ற ஒரு சுவாரசியம் இந்த படத்தில் இருக்கிறது.

ஒரு புதிய இயக்குநரின் படம் என்பதால் அதை அலட்சியமாக ஒதுக்காமல் படத்தில் கொஞ்ச நேரமாவது ஊன்றி கவனித்தால் நிச்சயமாக படம் உங்களுக்கு மிகப் பெரிய சர்ப்ரைஸ் கொடுக்கும்.

தனி ஒருவன் படத்தில் அரவிந்த்சாமி செய்தது போல ஒரு வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க ரொம்ப நாளாக ஆசை.. இது தவிர நானும் சொந்தமாக சில ஸ்கிரிப்ட்டுகள் எழுதி வைத்திருக்கிறேன்.. அதை எல்லாம் எடுக்க வேண்டும் என்கிற ஆசையும் இருக்கிறது” என்று கூறினார் ராகவ்..

*தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம்*

இயக்கம் ; இல. சண்முக சுந்தர், இசை ; பிரசாந்த் விஹாரி ஒளிப்பதிவு ; பிரதீப் பத்மகுமார் படத்தொகுப்பு ; அபிஷேக் மற்றும் விக்னேஷ் ஆக்சன் காட்சிகள் ; ராம்குமார், மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்,
செப்டம்பர் 15, 2026

## அமைந்தகரை பகுதியில் பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு, அவதூறாக பேசிய வழக்கில் ஒருவர் கைது

சென்னை 15, செப்டம்பர் 2026: கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 24 வயது பெண் ஒருவர் சென்னையில் உள்ள வங்கியில் வேலை செய்து கொண்டு, அமைந்தகரை பகுதியில் அவரது தோழியுடன் வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும், இப்பெண்ணுடன் வசித்து வரும் இவரது தோழியின் நண்பர் சேதுபதி என்பவர் அதே வீட்டின் கீழ் தளத்தில் வசித்து வருவதாகவும், கடந்த 23.08.2026 அன்று மாலை, மேற்படி 24 வயது பெண் வீட்டில் இருந்தபோது, சேதுபதி மாடிக்கு சென்று அங்கு வீட்டிலிருந்த அப்பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட போது, அப்பெண் கூச்சலிடவே, சேதுபதி அங்கிருந்து சென்று விட்டதாகவும், பின்பு கடந்த 10.09.2026 அன்று இரவு, அப்பெண் வீட்டில் இருந்தபோது, சேதுபதி, அவரது தோழி மற்றும் மற்றொரு பெண்ணுடன் சேர்ந்து அப்பெண்ணை உடனே வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறி, அவதூறாக பேசி, கையால் தாக்கி, வீட்டிலிருந்து வெளியே தள்ளிவிட்டு, வீட்டை பூட்டியதாகவும், பின்பு வீட்டின் உரிமையாளர் வந்து சமாதானம் பேசி, வீட்டு சாவியை அவர்களிடமிருந்து வாங்கி கொடுத்ததாகவும், எனவே தன்னிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தகராறு செய்த சேதுபதி மற்றும் தோழிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட்ட 24 வயது பெண், கே-3 அமைந்தகரை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது, வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.



கே-3 அமைந்தகரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய எதிரி சேதுபதி, வ/27, கிழக்குத் தெரு, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை நேற்று (13.09.2026) கைது செய்தனர். மற்ற 2 பெண்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சேதுபதி விசாரணைக்குப் பின்னர் நேற்று (13.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 180 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அலுவலர்கள், சார்நிலை அலுவலர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் ஆணை

சென்னை 15, செப்டம்பர் 2026: பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 180 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அலுவலர்கள், சார்நிலை அலுவலர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் விஜய் ஆணையிட்டுள்ளார். காவல்துறையில் 130, தீயணைப்பு துறையில் 20, சிறைதுறையில் 10, ஊர்க்காவல் படையில் 5, விரல்ரேகைப் பிரிவில் 2, தடய அறிவியல் துறையில் 4 அலுவலர்களுக்கும், அவர்களின் மெச்சத்தக்க பணியினை அங்கீகரிக்கும் வகையில் பதக்கங்கள் வழங்கபடுகிறது.

தமிழ்நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை, ஊர்க்காவல் படை, விரல்ரேகைப் கூடம் மற்றும் தடய அறிவியல் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களின் சிறப்பான பணிகளை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணி புரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

முதல் இந்த ஆண்டு, காவல் துறையில், தலைமைக் காவலர் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 138 நபர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், தீயணைப்பு வீரர் முதல் துணை இயக்குநர் வரையிலான 20 நபர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையில, முதல்நிலை சிறைக்காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான 10 நபர்களுக்கும், ஊர்க்காவல் படையில், ஊர்க்காவல் படைவீரர் முதல் படைத்தளபதி வரையிலான 5 நபர்களுக்கும், விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் மற்றும் தடய அறிவியல் துறையில் 4 அலுவலர்களுக்கும், அவர்களின் மெச்சத்தக்க பணியினை அங்கீகரிக்கும் வகையில் "மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அண்ணா சிறப்புப் பதக்கங்கள்" வழங்கிட,



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், 19.05.2026 அன்று காலை சுமார் 09.45 மணியளவில், நாகர்கோவில் லெமூரியா கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த கணபதிபுரத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள் ராட்சத கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு, அதில் 9 வயதுடைய வைஷ்ணவி என்ற சிறுமியை மட்டும் பொதுமக்கள் காப்பாற்றிய நிலையில், 9 வயதுடைய சிறுவன் சைலேஷ் கடலுக்குள் சுமார் 100 மீட்டர் தொலைவில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான்.

இந்நிலையில், தனது இரவுப் பணியை முடித்துவிட்டு, வீடு திரும்பி கொண்டிருந்த நாகர்கோவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்பு ஓட்டுநர் திரு ஆர்.ராஜசேகர் மேற்படி தகவலை கேள்விப்பட்டவுடன் இராஜாக்கமங்கலம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்து விட்டு, உடனடியாக கடற்கரைக்கு விரைந்து சென்று அங்கிருந்த உயிர்காக்கும் மிதவையை பயன்படுத்தி, தன் சொந்த பாதுகாப்பை பற்றி கவலைப்படாமல், கடலில் நீந்தி சென்று அச்சிறுவனை மீட்டுக் கரைக்கு கொண்டு வந்து அச்சிறுவனின் உயிரை காப்பாற்றினார்.

கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அன்னாரது துணிச்சலான செயலை வெகுவாக பாராட்டியுள்ளார்கள்.

இவரின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு செயலை பாராட்டி இவருக்கு "தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர பதக்கம்" வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேற்கண்ட பதக்கங்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

## கிண்டி பகுதியில் நடைபயிற்சியாக நடந்து சென்று கொண்டிருந்த நபரின் செல்போனை பறித்துச் சென்ற 2 இளஞ்சிறார்கள் சிறார் நீதிகுழுமத்தில் ஆஜர். செல்போன் மீட்பு. இருசக்கர வாகனம் பறிமுதல்

சென்னை 15, செப்டம்பர் 2026: சென்னை, வேளச்சேரி, காமராஜபுரம், கங்கையம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் நாகராஜு, வ/56 என்பவர் தனியார் நிறுவனத்தில் சூப்பர்வைசராக வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 12.09.2026 அன்று விடியற்காலை வழக்கம்போல, வேளச்சேரி, பைபாஸ் ரோட்டில் நடைபயிற்சியாக நடந்து சென்று கொண்டிருந்த போது, பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு வாலிபர்கள், நாகராஜு கையில் வைத்திருந்த விவோ செல்போனை பறித்துக் கொண்டு, இருவரும் தங்களது இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றதாகவும், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை கண்டுபிடித்து, தனது செல்போனை மீட்டுத் தருமாறும் நாகராஜு என்பவர் ஜே-3 கிண்டி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஜே-3 கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி செல்போன் பறிப்பில் ஈடுபட்ட 17 வயதுடைய 2 இளஞ்சிறார்களிடம் நேற்று முன்தினம் (13.09.2026) விசாரணை செய்தனர்.

அவர்களிடமிருந்து புகார்தாரரின் விவோ செல்போன் மீட்கப்பட்டு, குற்றச்செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் ஒரு இளஞ்சிறார் மீது ஏற்கனவே 1 திருட்டு வழக்கு உள்ளது தெரியவந்தது.

விசாரணைக்குப் பின்னர், 2 இளஞ்சிறார்களும், சிறார் நீதிக் குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உத்தரவுப்படி அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

## கிண்டி பகுதியில் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த நபர் கைது. 10 மதுபாட்டில்கள் பறிமுதல்

சென்னை 15, செப்டம்பர் 2026: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர்.ஏ.அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்து வரும் நபர்களை காவல் குழுவினர் கண்காணித்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, ஜே-3 கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், காவல் குழுவினர் நேற்று முன்தினம் (13.09.2026) காலை, கிண்டி, நரசிங்கபுரம், மடுவன்கரை பாலம் அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி பையுடன் நின்றிருந்த ஒரு நபரை விசாரணை செய்து, அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது, அதில் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து, விற்பனை செய்து கொண்டிருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், பிடிபட்ட நபரை ஜே-3 கிண்டி காவல் நிலையம் அழைத்துச் சென்று சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்தது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து, எதிரி மவுநயினார், வ/35, மடுவன்கரை, கிண்டி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 180 மி.லி.அளவு கொண்ட 10 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி மவுநயினார் மீது, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## சென்னை சர்வதேச விமான நிலையத்தில் ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல்

சென்னை 15, செப்டம்பர் 2026: உளவுத் தகவல் அடிப்படையில், நேற்று (13.09.2026) அன்று துபாயிலிருந்து சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த இந்திய ஆண் பயணி ஒருவரை, சென்னை சுங்கத்துறையின் விமானப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டனர்.

சுங்கத்துறைக்கு எந்தத் தகவலும் தெரிவிக்காமல் பச்சை வழித்தடம் வழியாக வெளியேற அந்தப் பயணி முயன்றார். அவரது உடைமைகளை விரிவாகப் பரிசோதித்த போது, ஹைட்ரோபோனிக் முறையில் பயிரிடப்பட்ட கஞ்சாவாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. அப்பைகள், அவரது உடைமைகளுக்குள் மிகவும் தந்திரமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன.




கண்டெடுக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருளின் எடை 2,794 கிராம் ஆகும். போதைப் பொருள் கண்டறியும் கருவியைப் பயன்படுத்திச் சோதித்ததில் அது கஞ்சா என்பது உறுதி செய்யப்பட்டது. போதைப்பொருள், மனநலப் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் சட்டம் 1985-ன் விதிகளின் கீழ் இப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சட்டவிரோதச் சந்தையில் இதன் மதிப்பு சுமார் ரூ.97 லட்சம் ஆகும்.

அப்பயணி கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது குறித்த மேல் விசாரணை நடைபெற்று வருகிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்